Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*



பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

# Female Body Language in the Poems of Tamil Female Poets

**Dr. B. M. Myla,** Assistant Professor of Tamil,
Sree Ayyappa College for Women, Chunkankadai, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0009-0000-8125-8596**
**DOI: 10.5281/zenodo.14752345**

## Abstract

*In the ancient Sangam literature in Tamil, one can see that patriarchal thought is common in the Indian family system apart from the hunting social system that went beyond the tribal tradition. Various social rituals related to women's bodies, women's professions, beliefs and religious institutions oppress women. Femininity is constructed as someone who possesses qualities such as fear, tenderness, modesty, and chastity and who is submissive to the male authority in the family. Women are considered as the one who fulfils men's desires, who is the object of desire, who ought not to question the male's knowledge, who do not uphold the authority of knowledge, who cannot leave the family system, who are subject to physical and social rules and who does not break caste rules. There is a common perception that if any female poet writes about female organs in their poems, it is called female body language. This study aims to re-read this and examine how the female body is recorded in the poems of Tamil female poets that transcend the boundaries of male-centric culture, by raising voices against anti-female concepts and values, and against the violence inflicted upon them.*

**Keywords**: Patriarchal Society, Female Body Language, Poems, Tamil Female Poets.

References

[1] Ilampooranar. *Tolkappiyam.* Sarada Publishing House.
[2] Seypal, S. *Akanaanuru Moolamum Uraiyum.* New Century Book House (P) Ltd., Chennai – 98
[3] Somasundaran, P. V. (Ed.). *Agananooru. Saiva Siddhanta Noorpathippu Kazhagam.* Chennai, 1966.
[4] Duraisamy Pillai, S. A., *Natrinai (Explanation).* Aruna Publications, Chennai, 1968.
[5] Balasubramanian, K.V. *Natrinai Moolamum Uraiyum.* New Century Book House (P) Ltd., Chennai – 98
[6] Puliyurkesigan. *Tholkappiyam.* Parinilayam, Chennai, 2012.

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

**Pandian Journal of Women's Studies**
*Peer-Reviewed Journal*
*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
**Volume 5, Special Issue 1 (2), January 2025** **E-ISSN: 2583-715X**



# தமிழ்ப் பெண் கவிஞர்களின் கவிதைகளில் பெண் உடல் மொழி

**முனைவர் ப. ம. மயிலா**, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
ஸ்ரீ அய்யப்பா மகளிர் கல்லூரி, சுங்கான்கடை, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0000-8125-8596
**DOI: 10.5281/zenodo.14752345**

**ஆய்வுச்சுருக்கம்**

*தமிழில் பழமையான சங்க இலக்கிய பிரதிக்குள் தொல்குடி மரபை தாண்டிய வேட்டை சமூக அமைப்பை தவிர நிறுவனமயமாக்கப்பட்ட குடும்ப அமைப்பில் ஆணாதிக்க சிந்தனை போக்கிருப்பதை நாம் பார்க்கலாம். பெண்ணின் உடல் சார்ந்தும், பெண்ணின் தொழில் சார்ந்தும் பல்வேறு வகையான சமூக சடங்குகள் நம்பிக்கைகள் சார்ந்தும் மத நிறுவனம் சார்ந்தும் பெண் ஒடுக்குதலுக்கு உள்ளாவதை நாம் கவனிக்கலாம். இதனை இந்த ஆய்வு முன் வைக்கிறது.*

**குறிப்புச்சொற்கள்:** ஆணாதிக்க சமூகம், பெண் உடல் மொழி, கவிதைகள், தமிழ் பெண் கவிஞர்கள்.

**முன்னுரை**

பெண்மை, அச்சம், மென்மை, நாணம், மடம், கற்பு, போன்ற பண்புகளை உடையவளாக ஆணின் துணிவுக்கு எதிராகக் குடும்பத்தில் கட்டுப்பட்டு நடப்பவளாக அவனது இச்சையைப் பூர்த்தி செய்பவளாக வேட்கை பொருளாக அறிந்தும் அறியாத பேதையாக ஆணின் அறிவை கேள்விக்குட்படுத்துபவளாக அறிவின் பாற்பட்ட அதிகாரத்தை கைக்கொள்ளாதவளாக குடும்பம் என்ற அமைப்பில் இருந்து வெளியேற முடியாதவளாக உடல் சார்ந்த விதிகளுக்கும் சமூகத்திற்கும் கட்டுப்பட்டு நடப்பவளாக, சாதி விதிகளை முறாதவளாக பெண்மை கட்டமைக்கப்பட்டுள்ளது. பெண் உறுப்புகளைப் பெண் கவிஞர்கள் கவிதைகளில் எழுதினால் அது தான் பெண் உடல்மொழியாக இருக்குமோ என்ற ஐயமும் பொது பார்வையும் உண்டு. அதனை மறுவாசிப்புக்கு உட்படுத்தி பெண்ணுக்கு எதிரான கருத்தாக்கங்கள், மதிப்பீடுகள் அவற்றின் வன்முறையைக் குரல் எழுப்பி ஆண் மைய மொழிக் கலாச்சாரத்தின் எல்லைகளை மீறி பெண் உடல் எவ்வாறு பெண் கவிஞர்களின் கவிதைகளில் பதிவாகியுள்ளது என்பதை ஆய்வுக்கு உட்படுத்துவதே இந்த ஆய்வின் நோக்கமாகும்.

**ஆணாதிக்க சமூக மதிப்பீடுகள்**

ஆணாதிக்க சமூகத்தின் இருமை எண்ணமான செய்வினை/ செயப்பாட்டுத்தன்மை, சூரியன் / சந்திரன், கலாச்சாம் / இயற்கை, பகல் / இரவு, தந்தை / தாய், மூளை / உணர்வு, அறிவுச்சார்பு / உள்ளச் சார்பு போன்ற எதிர்மறைகள் ஆண் / பெண் என்ற எதிர்மறையை

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

மையமாகக் கொண்டு ஆணாதிக்க சமூக ஒழுங்கமைவுக்கு ஏற்ப கட்டமைக்கப்பட்டுள்ளது. ஆண்மை என்ற கருத்தாக்கத்தினுள் வீரம் / துஒலவ, வலிமை / ஆற்றல், அறிவு / ஞானம் போன்றவைகள் கட்டமைக்கப்பட்டுள்ளன.

சங்ககால சமூக அமைப்பில் இதனை நாம் கண்கூடாகக் காணலாம். போரில் வெற்றியை நோக்கியதாகவும், போரில் எதிரியை வீழ்த்தும் நிர்வாகம் சார்ந்ததாகவும் சமூக சாதிய கட்டுப்பாடுகளை பேணுவதிலும் ஆண்மை கருத்தாடல்கள் கட்டமைக்கப்பட்டுள்ளது. இந்த கட்டமைக்கப்பட்டுள்ள பண்புகள் சார்ந்து தான் பெண்மை இந்த சமூகத்தில் கட்டமைக்கப்பட்டுள்ளது. பெண்மை ஆண்மை என்ற பாலினப்பாகுபாடுகள் மனிதர்களின் உள்ளுணர்வில் மட்டும் தங்கியிருக்கவில்லை. அப்பாகுபாடுகள் மொழியிலும் ஆழமாக வேரூன்றச்செய்து நிலை நிறுத்தப்பட்டுள்ளன. "லக்கான்" (Lacan) என்ற மொழியியல் அறிஞர் மொழி தான் மாந்தரை பண்பாட்டு பாலியலுக்கு கொண்டு சென்று பெண் ஆண் என்று கட்டமைக்கின்றது என்கிறார். ஆகையினால் தான் பெண்ணும், ஆணும் சமூக உயிரிகளாகக் கருதப்பட்டாலும் பெண் வேறு தளத்திலும், ஆண் வேறு தளத்திலும் முரண்படுத்தப்பட்டிருப்பதை காணமுடிகிறது.

சமூக வாழ்நிலை தளத்தில் உடலியல் ரீதியாகவும் வாழ்கை முறையிலும், பண்பாட்டு நடத்தைகளிலும் இன்றும் பிற நடவடிக்கைகளிலும் பெண்ணுக்கு வேறான அனுபவங்களும் ஆணுக்கு வேறான அனுபவங்களும் பெறப்படுகின்றன. அதாவது பாலியல் அடிப்படையிலும், பாலின பாகுபாட்டின் அடிப்படையிலும் வேறுபடுத்தப்படுவதால் பெண்ணின் அனுபவங்கள் ஆணின் அனுபவங்களில் இருந்து வேறுபட்டே தான் அமைந்திருக்கின்றன.

**சங்க கால சமூக அமைப்புச் சூழல்**

தொல்காப்பியம் பெண்களுக்குரிய பண்புகளாக,

**அச்சமும் நாணமும் மடனும் முந்துறுத்த**
**நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப (தொல்.,களா., 1045)**
**உயிரினும் சிறந்தன்று நா ணே; நாணினும்**
**செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று எனத்**
**தொல்லோர் கிளவி புல்லிய நெஞ்சமொடு (தொல்.,களா., 1059)**

இப்படி பெண்ணினது பண்புகளாக நாணத்தையும் கற்பையும் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி அடக்கம், அமைதி, நேர்மை, உண்மையினை வற்புறுத்தும் சொல்வன்மை, நல்லறிவு, விருந்தினரை வரவேற்றல், சுற்றம் ஓம்பல் என்பவை பெண்களின் பண்புகளாக தொல்காப்பியம் வரையறுக்கிறது.

மொழியைக் கையாளும் அதிகாரம் யாரின் கைவசம் இருந்ததோ அவரது கண்ணோட்டத்தை ஒட்டியே மொழியும் வடிவமைக்கப்படுவதை காணமுடிகிறது. முற்காலத்தில் உள்ள தாய்வழி சமூக அமைப்பு தந்தை வழி சமூக அமைப்பாக மாறிய பின்

பொருளாதாரம், அரசியல், சட்டம், சமயம் எனப்பல துறைகளிலும் ஆண்களே ஆதிக்கம் செலுத்தியதால் மொழி ஆண் வழிப்பட்டதாக மாறியது, சங்கக் கவிதைகளில் ஆண்களது பேச்சில் மறங்களும், அறங்களும் புதைந்து கடந்தன. மாறாக பெண்களது பேச்சில் சுழிவிரக்கமும், ஏக்கமுமே பொழிந்து கிடந்தன.

பேச்சினை பெண் அம்சம் என்றும் அது நிலையற்றது என்றும், எழுத்தினை ஆண் அம்சம் என்றும் அது நிலைத்தது என்றும் பின் நவீன சிந்தனைவாதி மிஷேல் பூக்கோ கூறுகிறார். அதிகாரம் செலுத்த முயன்ற ஆண் சமூக அமைப்பு பெண்களை ஒடுக்குவதற்கு முதலில் அவர்களது மொழியைத் தான் கையில் எடுத்துள்ளது. பெண்கள் இன்சொல்லிற்கும், மென்மையான சொல்லிற்கும் சொந்தக்காரர்கள் என்பதை வலியுறுத்திப் பின் அவர்கள் இப்படித்தான் பேச வேண்டும் என்பதை சங்கக் கவிதை அழுத்தமாகவும் வலிமையாகவும் வரையறுத்துக் கொண்டது.

**பூங்கட் புதல்வன் உறங்கு வயில் ஒல்கி**
**வந்தீக எந்தை என்னும்**
**அம்தீம் கிளவி கேட்கு நாமே (நற்., 221)**

என்ற நற்றிணை பாடல் வறிகள் மூலம் தலைவி அழகிய இனிய குரலை உடையவள், விருந்தினரை எதிர்கொண்டு போற்றும் விருப்பம் உடையவள் பின்னர் தன் மகன் தூங்கும் இடத்தில் துவளும் நடையினராய் விடியற்பொழுதில் சென்று எந்தாய் வருக என தலைவி அழைப்பாள். அத்தகைய அழகிய இனிய குரலை நாமும் கேட்க வேண்டும் என்கிறான் தலைவன். இங்கு ஆணின் பேச்சின் மூலம் பெண்ணின் மொழி வரையறுக்கப்படுகிறது. இதன் மூலம் பெண்களது மொழியை ஆண்கள் வரையறைப்படுத்தியுள்ளது தெரிய வருகிறது. பெண்கள் சிலவாகி சொற்களை மட்டும் பேசக் கூடியவர்கள் என்பதன் மூலம் பெண்கள் குறித்த ஆணாதிக்க எண்ணத்தின் மன வெளிப்பாட்டை அறிந்து கொள்ள முடிகிறது.

**உடல் - வரையறை**

பெண்மை, ஆண்மை என்ற பாலினப் பாகுபாட்டிற்கு வரலாறு நெடுகிலும் பல்வேறு விளக்கங்கள் தரப்படுள்ளன. மானிட இனம் தங்களைப் பற்றி உருவாக்கிக்கொண்ட கருத்தியல், அரசியல் நிலைப்பாடு ஆகியவற்றை ஒட்டியே இந்த விளக்கங்கள் அமைகின்றன. பெண் உடலில் ஏற்படும் பருவ மாற்றங்களை அச்சுறுத்துபவையாகவும், ஈர்ப்பவையாகவும் கட்டமைத்துள்ளனர். ஆண் உடலில் ஏற்படும் மாற்றங்கள் நேர்கோட்டுப்பாணியில் வளர்ச்சியைக் குறிப்பதாகவும், பெண் உடலில் ஏற்படும் மாற்றங்கள் நேர்க்கோட்டுப் பாணியில் வளர்ச்சியைக் குறிப்பதாகவும், பெண் உடலில் ஏற்படும் அனைத்து மாற்றங்களும் நேர்கோட்டைச் சிதைப்பவையாகவும் வரையறுக்கப்பட்டுள்ளது.

மாதவிலக்கு, பிரசவம், மாதவிலக்கு நிற்றல் போன்ற இயற்கையான உடற்கூறு நிகழ்வுகள் ஆணாதிக்கச் சமூக அமைப்பால் தூய்மையற்ற நிகழ்வாகக் கருதப்பட்டன. எனவே

**Volume 5, Special Issue 1 (2), January 2025** **E-ISSN: 2583-715X**

பெண்ணுடலை தீட்டு என்று ஒதுக்கி வைத்து சுத்தம், அசுத்தம் என்ற எதிர்வுகளை கட்டமைத்தனர் மாதவிலக்குக் குறித்தச் சிந்தனை பெண்களுக்குள்ளும் திணிக்கப்படுவதால் தனது உடலை தானே வெறுக்கும் மானிடப்பிறவியாக பெண் மாறிப்போனாள். ஆண் நோக்கல் பெண் உடலானது தீட்டாகப் பார்க்கப்பட்டாலும் அழகு, சுகம், போகம் தரும் பொருளாகவும், அனுபவிக்கத்தக்க பொருளாகவும் அணுகப்படுகிறது. எனவே பெண்ணுடலைப் போகப்பொருளாகக் கட்டமைக்கின்றது ஆணாதிக்க சமூக அமைப்பு என்று உறுதியாகக் கூறலாம்.

**சங்கக் கவிதையில் தலைவியின் இயல்பு**

ஆணின் உடலை வலிமையாகவும், பெண்ணின் உடலை பாலியல் உறுப்புக்களை வைத்தும் வரையறை செய்துள்ளனர். ஆணின் உடலுக்கு நேர் எதிர் பண்பினை கொண்டது பெண்ணில் உடல் என்றளவிலேயே பெண்ணுடல் வரையறுக்கப்பட்டுள்ளது.

**பணைத்தோள்**
**நாறையங் கூந்தற் கொம்மை வரிமுலை**
**நிரையிதழ் உண்கண் மகளிர்க்கு**
**அறிய வாயலென அழுங்கி செலவே (அகம்., 65)**

பெண்ணின் குண இயல்புகளில் முக்கியமான ஒன்றாக தாய்மை கொண்டாடப்படுகிறது. ஒரு குடும்ப பெண்ணின் முக்கியமான பொறுப்புகள் அனைத்தும் தாய்மை நோக்கோடு தான் நிகழ்த்தப்படுகின்றன. தாய் சேய் உறவு என்பது பூமியில் வாழும் உயிரினங்கள் அனைத்திற்கிடையிலும் இயற்கையாக அமைந்த உயிரியல் பண்பாகும். ஐந்தறிவுடைய விலங்குகளிடம் தாய் விலங்கு ஈனும் கட்டி அந்த தாய்க்கு தான் சொந்தமாக இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் ஆணாதிக்க சமுதாயம் உருவாக்கியுள்ள சமூகக் கலாச்சார நிறுவனங்களில் தான் தாயிடமிருந்து குழந்தை அபகரிக்கப்படுகிறது. இந்தப் பூமினை முழுவதுமாக ஆணே கையகப்படுத்திக் கொண்ட பிறகு பெண்ணுக்கென்று அகாரம் கொண்டாடத் தனது இனம்பெருக்கத் தொடர்ச்சியைப் பெண்ணே கையகப்படுத்த வேண்டும். இதன்மூலம் தனக்கான மொழி வெளியையும் புனைவு வெளியையும் சுவைவெளியையும் அவளால் உருவாக்கிக் கொள்ள முடியும் என்று மாலதி மைத்திரி கூறுவதை இந்த இடத்தினை நாம் கருத்தில் கொள்ளலாம்.

உடல் ரீதியாகப் பாலியல் அனுபவம் பெண்ணுக்கும் ஆணுக்கும் பொதுவானதாயினும் அது நிகழ்த்துபவர் நிகழ்த்தப்படுவது என்ற வேறுபாடான செயல்களைப் பொறுத்து மாறுபடுன்றது. பாலினத்தில் உள்ள வேறுபாடு ஏனைய தளங்களிலும் ஆணுக்கு ஆளும் பாத்திரத்தையும், பெண்களுக்கு ஆளப்படும் பாத்திரத்தையும் ஏற்படுத்துகிறது. ஆளப்படும் பாத்திரமான பெண்ணைக் காதலியாய், மனைவியாய், குழந்தைகளின் தாயாய், தாசியாய், அழகு பொருளாய், பதுமையாய் உற்று நோக்கினான் ஆண். இவ்வாறாக பாலினப்

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

பாகுபாடானது. பெண்ணை அமைதியின் மறுவடிவமாகச் சித்தரித்துள்ளது. அதன்வழிப் பெண்மைக்குள்ள பெருமைகளெல்லாம் தாய்மையில் தான் நிறைவு பெறுகின்றன. பெண்கள், மனைவி, தாய், தலைவி என்ற பதவிகளோ என்ற பதவிகளாலேயே பூரணத்துவ அடைகின்றனர் என்பதை விட இப்படி நிலைகளைக் கடக்காவிட்டால் அவளது வாழ்வு முழுமை பெறுவதில்லை என்று நம்ப வைக்கப்பட்டாள்.

தாய்மைக்கு ஏற்ப அவளது உடல் மெல்ல மெல்லச் செதுக்கப்படுகிற நிலையில் உடலோடு மனமும் இயைந்து களிக்கும் உணர்வை அவளே உணர முடியும். பெண்ணின் கருப்பை என்பது தனி உலகம். அவ்வுலகத்தின் சூட்சமங்களறிய பல நூற்றாண்டு காலம் மானிட இனம் அறிவியல் துணையோடு போராடி கொண்டு இருக்கிறது. இயற்கையின் ஆற்றலை இயற்கையின் செய் நேர்த்தியை உணர்கிற பிராதன இடமாக கருவுருதல் முதல் குழந்தைப்பேறு வரையிலான காலங்களைச் சொல்லலாம்.

**ஆண் பெண் தொழில் கருத்தாக்கம்**

வீட்டு வேலை செய்கின்ற பெண் தாழ்வானவளாகவும் வருமானம் ஈட்டும் வேலை செய்யும் ஆண் உயர்வானவனாகவும் சமூக அமைப்பில் கருதப்பட்டனர். பெண்ணின் பணிகள் சமூக உற்பத்தியாகக் கருதப்படாமல் சமையல் செய்தல், துணி துவைத்தல், பாத்திரம் கழுவுதல், வீட்டை பராமரித்தல், குழந்தையைப் பராமரித்தல் என்ற வகையில் உற்பத்திக்கு நேரடியாகத் தொடர்பற்ற சேவைகளாகக் கருதப்பட்டது. பெண் மனை சார்ந்தவள், மனைக்குரியவள் என்ற பாலின பாகுபாட்டின் அடிப்படையிலேயே பெண்களது தொழில் வரையறுக்கப்பட்டது.

திணைசார் அடிப்படையில் ஆண்களது தொழிலானது தேன் எடுத்தல், வேட்டையாடுதல், ஆநிரை மேய்த்தல் உழுதல், மீன்பிடித்தல், களவாடுதல், போர்த் தொழில் புரிதல் என்ற நிலையிலும் பெண்களது தொழில் பயிர்த்தொழில் செய்தல், திணைப்புனம் காத்தல், தினை உலர்த்தல், பால் கறத்தல், மோர் விற்றல், உப்பு விற்றல் மீன் பிடித்தல், மீன் உலர்த்தல் பூ விற்றல் என்ற நிலையிலும் வரையறுக்கப்பட்டுள்ளது. அதாவது ஆண்களது தொழில் புறவெளித் தொழிலாகவும், பெண்களது தொழில் மனைசார் தொழிலாகவும் வரையறை செய்யப்பட்டுள்ளது. ஆண் உடல் வலிமை பெற்றவன் என்று உருவாக்கப்பட்ட பாலின பாகுபாட்டின் அடிப்படையிலும் பெண் மென்மைத்தன்மை வாய்ந்தவள் என்று உருவாக்கப்பட்ட பாலினப் பாகுபாட்டின் அடிப்படையிலும் இருபாலருக்குமான தொழில் வரையறை செய்யப்பட்டுள்ளது.

**முடிவுரை**

இவ்வாறாக சங்க கால வாழ்வியல் வரையறைக்குள் பெண் உடல் சார்ந்தும் தெரிழில் சார்ந்தும் எவ்வாறெல்லாம் கட்டமைக்கப்பட்டாள் என்பதை ஆண் பெண் என்கிற பண்பாட்டு அடையாளத்திற்குள் நின்று இந்த ஆய்வு பதிவு செய்கிறது.

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

**குறிப்புகள்**

[1] இளம்பூரணர். *தொல்காப்பியம்.* சாரதா பதிப்பகம்.

[2] செயபால், இரா. *அகநானூறு மூலமும் உரையும்.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட், சென்னை – 98

[3] சோமசுந்தரன், பொ, வே. (உ.ஆ.). *அகநானூறு.* சைவ சித்தாந்த நூற்கழக வெளியீடு, சென்னை,1966.

[4] துரைசாமி பிள்ளை, சு. ஔவை. *நற்றிணை* (விளக்கவுரை). அருணாப் பப்ளிகேஷன்ஸ், சென்னை, 1968.

[5] பாலசுப்பிரமணியன், கு,வே. *நற்றிணை மூலமும் உரையும்.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட், சென்னை – 98

[6] புலியூர்கேசிகன். *தொல்காப்பியம்.* பாரிநிலையம், சென்னை, 2012.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.